www.tamilarangam.net

Raya

# மண்

கலை, இலக்கிய, சமூக, மாத இதழ்

RAYA
97 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE



இதழ்: 18

ஆடி JULY 1991

KULTIVIERUNG FÜR FRIEDLICHE ZUKUNFT

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமர்ப்பணம்

நமது மொழி, இனம், மண்ணின் மீட்புக்காக குருதி சிந்தியோருக்கும், உயிர் கொடுத்தோருக்கும், உயிர் கொடுக்கக் காத்திருப்போருக்கும் இவ்விதழை சமர்ப்பிக்கின்றோம்.

# மண்

அரசியல், சமய சார்பற்றது

வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான்.

இது ஒரு இலவச வெளியீடு.

இவ்விதழை ஏனையோருக்கும் கொடுத்து உதவுங்கள்.

www.tamilarangam.net

# உள்ளே


* எங்கள் கருத்து
* உங்கள் கவனத்திற்கு
* சிறுவர் வட்டம்
* வினாவிடைப் போட்டி
* கவிதைகள்
* சிறுகதை
* தெரிந்து கொள்ளுங்கள்
* அர்த்தமுள்ள வெளிநாடு
* சிலை
* குறுக்கெழுத்துப் போட்டி
* இந்தியத் தேர்தல்
* அன்பர் நயால்
* கிரிக்கட்
* நூல் அறிமுகம்.








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எங்கள் கருத்து

ஜேர்மனியில் வாழும் தமிழர் மத்தியில் இருவகையான பீதி உணர்வு ஏற்பட்டுள்ளது. விசாக்கள் மிகக் குறைந்த கால எல்லையில் வழங்கப்படுவதும் சில இடங்களில் உடனடியாகத் திருப்பி அனுப்பப் போகிறோம் என்று சொல்லியும் இருப்பதுதான். யூலை 1ம் திகதியளவிலான காலக்கெடும் அப்போது வெளியாகும் புதியசட்டம் தமிழரை வெளியேற்றலாம் என்ற எதிர்பார்ப்பு ... பரவலாக அடிபடுகின்றது. சட்டத்துறையினருக்கோ, அதிகாரிகளுக்கோ இது பற்றிய விபரங்கள் தெரியாமல் இருப்பதும் சட்டத்தை தெரியாமல் இது வெளி வராதிருப்பதால் இது பிரச்சினையானதாக இருக்கும் என்று அவர்களே சொல்வதும் யூலை 1ம் திகதி எப்படியான சட்டங்கள் வரப்போகின்றன. என்ன நடக்கப் போகின்றது என்பது எல்லார் மனதிலும் கேள்விக் குறியாகத்தான் இருக்கின்றது.

அகதிகளை திருப்பி அனுப்பும் விடயத்தில் ஜேர்மன் அரசு பலகாரணங்களை கூறுகின்றது. இந்த ஜேர்மன் அரசு சொல்வதை அதன் எதிர்க்கட்சிகளும் ஒத்துக் கொள்ளும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்வுப் பொதி அனுப்பப் போவது உறுதி யாகின்..... நாம்பட்ட கிழக்கிற் கென் திருப்ப..... ஏற்றுக் கொள்ள நிலை ஆங்கு நிலவுகின்றதா என்றால் இல்லை.. தென்பகுதியில் சிங்கள மக்களோ பாது காப்பற்ற நிலையில் பீதியடைந்துள்ளனர் கிடக் கிறார்கள். ஐரோப்பிய நாடுகளிலிருந்து திரும்பும் தமிழர் 2 லட்சம் தமிழர் கொழும்-பில் தங்க முடியுமா? அவர்களுக்கான பாது காப்பு என்ன? உணவு, உறைவிடம் யார் தருவார்கள்? என்பது பெரிய பிரச் சினையாகும். இங்கிருந்து திரும்பும் தமிழர் கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டி வரும். அப்படிச் செல்லக் கூடிய சூழலை உருவாக்கிய பின்னரோ, உருவான பின்னரோ தீர்வுப் பொதியின் முடிவை ஜேர்மனி மேற் கொள்ள வேண்டும்.

இலங்கை அரசிற்கும் போராளி களுக்கிடையில் போர் நிறுத்தத்தைக் கொண் டு சிறாருக்கான பேச்சுவார்த்தை-யின் ஊடே நிரந்தரத் தீர்வு காண வேண்டும் அது செயற்பட வேண்டும். அத்தகைய சூழ் நிலை ஏற்பட்டுவிட்டதா? தமிழர்கள் தீர்வுப் பொதியில் எதுவித நம்பிக்கையும் கொள்ள முடியாது. அதற்கான எல்லாம் மனதிற் கொள்ளாமல் ஜேர்மனியின் அகதிகளுக்கான ஒரு சட்டத்தையே பின்பற்றுவது எந்தவிதத்திலும் நியாயமாகாது என்பதை தெரியப்படுத்து கிறோம்.

தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரு வதற்கு தகுதியற்றவர்கள். அவர்கள் உழைக்க வந்தவர்கள். என்றபேச்சு அங்கிங்கு எழும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கட்டும். அவர்கள் திரும்பிப் போகின்ற நிலையிலா அவர்களுடைய தாயகம் இருக்கின்றது என்பதை வெளியுலகம் அறியாமலா இருக்கின்றது? அங்கு அமைதி சமாதானம் என்றால் திரும்புகிற பேர்களை வெளியுலகம் அறியாமலா இருக்கின்றது? அங்கு அமைதி சமாதானம் என்றால் திரும்புகிற பேர்களை வெளியுலகம் ஏன் போய் சொல்ல வேண்டும்? இதை எல்லாம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடுகிறோம்.

புதிய சட்டம் எமக்கு எந்த வகையிலும் இங்கு தங்கிவிடுகிற வாய்ப்புக்களையும் தரப்போவதில்லை என்றால் எமது நாட்டின் இப்பிரச்சனைக்கான தீர்வை ஏற்படுத்துமாறு வெளியுலகையும், அதனோடிணைந்த ஐரோப்பிய நாடுகளும் இலங்கை அரசை வற்புறுத்தி நெருக்க வேண்டும். விரைவில் தீர்வை ஏற்படுத்துவதில் இந்நாடுகள் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதே சிறந்த, ஆரோக்கியமான முடிவாகும்.

— முற்று —

"ஒவ்வொரு துன்பமும் ஒரு வழிகாட்டி
அதுவே நன்மைக்கு தூண்டுகோலாகும்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் கவனத்திற்கு !!!!

*

யூலை 11ம் திகதி நடைமுறைக்கு வரவிருக்கும் சட்டம் தமிழர்களுக்கு பாதகமானதே என இங்குப் பொதுவாக பலராலும் நம்பப்படுகின்றது. இதனை எதிர்த்து சகல சேவை இயக்கங்களான செஞ்சிலுவைச் சங்கம், புயக் கொமி, சின்னாய் போன்ற ஏனைய இயக்கங்கள் ஊடாகவும், ஜெனான் போன்ற அரசியல் கட்சிகள் ஊடாகவும் இவ்வதை அரசின் மீது நெருக்கடியையும் அதன் தோல்வியையும் தோற்று விக்களையும் அரசியல் தீர்வு காண்பதற்கு வற்புறுத்தி நெருக்குதலை ஏற்படுத்த முயற்சிகளை கையாளியுள்ளனர்.

*

மண் சஞ்சிகையின் அங்கத்தவர்களே! உங்கள் படைப்பு ஆக்கங்கள் வந்து சேர்வதில் தாமதம் ஏற்படுகின்றது. எமது மக்களுக்குத் தேவையான விடயங்களையும் இவற்றைப் படித்துப் பயன் பெறக் கூடிய ஆக்கங்களையும். எமக்கு அனுப்புங்கள். புதிய எழுத்தாளர்களுக்கும் மண் களம் அமைத்துக் கொடுக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுவர்



## முளையில் களை பிடுங்க வேண்டும்

மோகன் என்னும் சிறுவன் தினமும் பாடசாலையிலிருந்து திரும்பும்போது சிறு விளையாட்டுப் பொருட்களை திருடி வருவதில் ஆர்வமாக இருந்தான். பலநாட்களாக சிறு விளையாட்டுப் பொருட்களை திருடி வரும் போதெல்லாம் அவனுடைய தாயார் பலமுறை முத்தமிட்டு, கொண்டு வந்த பொருளை வாங்கி கவனமாக வைத்துக் கொள்வாள். தாயாரின் முத்தத்தில் ஆனந்தமடைந்த மோகன் மறுநாள் என்னதை திருடி வருவது என்ற எண்ணத்திலேயே பாடசாலைக்குச் செல்வான்.

படிப்படியாக அவ்வயதுச் சிறுவன் இருபது வயது வரை திருட்டினாலே தாயாரின் அன்பையும் முத்தங்களையும் அதிகமாகப் பெற்று வந்தான். அந்நேரத்தில் பெரிய ஒரு திருட்டை செய்ததால் அவன்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குற்றவாளியாகி இறைக்கு அனுப்ப ஆயத்த
மான போது. நீதிபதியைப் பார்த்து ஒரு
வேண்டுகோள் விடுத்தான். எனது அன்பு
அம்மாவுக்கு கடைசியாக முத்தம் கொடுக்கப் போகின்
றேன் என்றான். நீதிபதியும் அனுமதி
வழங்கவே தாயிடம் சென்று முத்தம் கொடு
க்கப் போவது போல் சென்று தாயாரின் மூக்கை
கடித்துத் துப்பிவிட்டு இவ்வளவு காலமும்
நான் திருட்டுத் தொழில் செய்த போதெல்
லாம் என்னைக் கண்டிக்காமல், தண்டிக்கா
மல் விட்ட படியால் இன்று இப்படியாக
என்னை உருவாக்கிய பழி என் தாயாரையே
உரியது. இப் பொழுதாயும் இது குழந்தை
தனில் இருந்தே பொறுத்த பிள்ளைகளின் நல்
நடத்தைகளில் கவனமாக இருக்க வேண்
டும் என்றும் உண்மையைப் புரிந்து கொண்
டான். முளையில் தவறை திருத்தி இருந்தால்
என் மூக்கு இருந்திருக்கு மென தாயார் மனம்
வருந்தி அழுது புலம்பினார்.

சுஜாதா - நடராசா
5600, WUPPERTAL




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பூனையும் நாயும்

ஒரு பூனை பாதை வழியாய்ப் போய்க் கொண்டிருந்தது. அந்தப் பாதையில் ஒரு ஆழமான குழி இருந்தது. ஆனால் அந்தக் குழி இலை குழைகளால் மூடப்பட்டிருந்தது. விடையம் விளங்காமல் குழியின் மேல் நடந்த பூனை அந்தக் குழிக்குள் விழுந்துவிட்டது. மிகவும் ஆழமாக இருந்ததால் பூனை குழியை விட்டு வெளியே வர முடியாமல் அலறியது. அப்பொழுது அவ் வழியே வந்த நாய் கிட்டப் போய் என்ன நடந்தது என்று கேட்டது. பூனை கூறியது இங்கே வாரும் இருவரும் சேர்ந்து விளையாடிக் கைப்பிடிவோம் என்று கூறவே நாய் ஆவலுடன் எட்டிப் பார்க்கவே கால் தவறி குழிக்குள் விழுந்தது.

தந்திர மிக்க பூனை நாயைப் பார்த்து, பாரும் ஒரு விளையாட்டுக் காட்டுகிறேன் என்று கூறி நாய்க்கு மேல் ஏறி பாய்ந்து தாவி ஏறி அந்தக் குழியிலிருந்து தப்பி ஓடிவிட்டது. எனவே பெருந்தன்மையான மனிதர்கள் ஆபத்தான வேளைகளை நம்பி வாழக் கூடாது என்பதும் உண்மை தெரிகிறது.

தர்சிகா. சந்திரசேகரம்.
4150, KREFELD

இம்மாதம் சிறந்த சிறுகதைக்கான 10,DM பரிசைப் பெறுபவர்:- ரூ-சுதாகா
WUPPERTAL
இவருக்கு எங்கள் பாராட்டுக்கள்.....

www.tamilarangam.net

# 6. புது வினாவிடைப் போட்டி முடிவு

1- A = ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா
B - யூரிககாரின்
C - இமயமலை
D - சீனா

2-

| | | |
|---|---|---|
| 4 | 9 | 2 |
| 3 | 5 | 7 |
| 8 | 1 | 6 |



3- A - D.S. சேனநாயக்கா.
B - A. அமிர்தலிங்கம்
C - 1948 ஆம் ஆண்டு
D - தேயிலை, றப்பர், கோப்பி

4- A - கன்னியா (திருகோணமலை)
B - தைநடி
C - கிளிநொச்சி
D - கந்தளாய்

5 - 1. காதல் - சாதல்
2. காடு - வீடு
3. இரவு - பகல்
4. இனிப்பு - உறைப்பு
5. அன்பு - வெறுப்பு
6. நல்லது - கெட்டது
7. ஒற்றுமை - வேற்றுமை
8. பள்ளம் - மேடு
9. நட்பு - பகை
10. போர் - சமாதானம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 5 கேள்விகளுக்கும் சரியாக விடை எழுதியோர்கள்

1 - செல்வி - பரீஸனி
- கிருஷ்ணபிள்ளை - SARSTEDT
2 - " - அஜீவா - அன்பரட்ணம் - HENNEF
3 - " - தர்மிளா - கலாநிதி - "
4 - " - சுபாஜினி - சபாரட்ணம் - LAGE
5 - " - சுபிலினி - ஜெயவேலேந்திரன் - SOLINGEN
6 - " - வாணி - வைத்தீஸ்வரன் - MONCHENGLAD-BACH
7 - " - அம்பாலி - சிவராஜன் - DORTMUND
8 - " - யாழ்மொழி - சந்திரபால் - "
9 - " - தர்சிகா - கந்தகுலம் - KREFELD
10 - " - அனுஷா - சில்வெஸ்டர் - DUISBURG
11 - " - அகல்யா - சந்திரபால் - DORMUND
12 - " - விஜயா - சுப்பிரமணியம் - "
13 - " - சர்மிளா - வரதராஜா - DUISBURG
14 - " - மீரா - மகேந்திரன் - KERPEN
HORREM
15 - " - பிருந்தா - மனோகேஸ்வரன் - ELSDORF
16 - " - தர்ஷினி - கமலநாதன் - SOLINGEN
17 - செல்வன் - சுதீசன் - லோகீஸ்வரன் - NÜRNBERG
18 - " - சுதன் - ஜெய வேலேந்திரன் - SOLINGEN
19 - " - விஜிதன் - மகேந்திரன் - "
20 - " - விக்னேஸ்வரன் - கமலநாதன் - "
21 - " - சிவகுமார் - சிவசுப்பிரமணியம் - SELM
22 - " - அரவிந்தன் - சிறீமனோகரா - KERPEN
HORREM
23 - " - ஜனார்த்தனன் - சத்திய மூர்த்தி - DUISBURG



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்களுக்கு எங்கள் பாரா-
-ட்டுக்கள். இவர்களில் அதிஷ்டசாலி-
-யாகத் தெரிவு செய்யப்படும்
திரும்பி வரவில்லை (சித்திரக்கதை)
என்னும் சிறுவர் நூலைப் பரிசாகப்
பெறுபவர்.



செல்வி - அகல்யா - சந்திரபால்
DORTMUND

## வினாவிடைப்போட்டி - 7

1_
A - துப்பாக்கிச்சூட்டிற்குப் பலியான உலகத் தலைவர்கள் (4) நால்வரின் பெயர் எழுதுக.
B - இலங்கை விமான சேவையின் பெயர் என்ன?
C - சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தவரின் பெயர் என்ன?
D - உலகத்தில் தமிழர்கள் கூடுதலாக வாழும் நாட்டின் பெயர் என்ன?

2 - இரு கிலோ கிறாம் எத்தனை இறாத்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3- A. இலங்கையில் மிகநீண்ட நதியாகிய மகாவலி எங்கிருந்து எங்கேவரை பாய்கிறது.

B. பின்வருவன விளையும் இரண்டு இடங்களைக் குறிப்பிடவும்.

தேயிலை :- ....... .......

றப்பர் :- ....... .......

நெல் :- ....... .......

C. உங்களுக்குத் தெரிந்த கடற்கரை நகரங்கள் மூன்றின் பெயரைக் குறிப்பிடுக.

4- பின்வருவன அமைந்துள்ள இடங்களின் பெயரைக் குறிப்பிடுக.

1- காசநோய் மருத்துவநிலையம்:-
2- வயோதியர் இல்லம்:-
3- சிமெண்ட் தொழிற்சாலை:-
4- வெடியரசன் கோட்டை:-

5- பின்வரும் பழமொழிகளை முடித்து எழுதவும்:-

1- அகத்தின் அழகு ...........
2- பாலுக்கும் காவல் ...........
3- இளமையில் கல்வி ...........
4- ஐந்தில் வளையாதது ...........
5- ஆலும் வேலும் பல்லுக்குறுதி! .......

புதிய திகதி - 15-07-91



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுவர்களே கண்டுபிடியுங்கள்

## இதழ் 17 - கண்டுபிடித்தவர்கள்

விடை :-

**படம்.1**


சிங்கம்
கரடி
கழுதை

**படம்.2**

அப்பா , மாமா
அம்மா , தம்பி
அக்கா

செல்வன் :- மதுராஜ் - இம்மானுவேல் - BIELEFELD
,, - சுதீசன் - சோதீஸ்வரன் - NÜRNBURG
,, - பிரதீபன் - கோராசிறி - HENNEF
,, - சுஜன் - ஜெய்வேந்திரன் - SOLINGEN
,, - விஜிதன் - மகேந்திரம் - ,,
,, - றஜேந்தன் - சத்தியமூர்த்தி - DUISBURG
செல்வி - அனுஜா - சில்வெஸ்ரர் - DUISBURG
,, - மீரா - சந்திரன் - ESSEN
,, - சுஜீவா - சண்முகரட்ணம் - HENNEF
,, - கபிலினி - ஜெய்வேந்திரன் - SOLINGEN
,, - சுபாஜினி - கனகரட்ணம் - LAGE
,, - சுர்மிளா - கந்தவேல் - KREFELD
,, - வித்யா - சுப்ரமணியம் - SELM
செல்வன் - தினேஸ்குமார் - தியாகராஜா - DUISBURG

இவர்களுக்கு எமது பாராட்டுக்கள். இவர்களில் அதிஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டு 10,-DM பரிசைப் பெறுபவர்.



செல்வி - சுஜீவா - சண்முகரட்ணம்

5202, HENNEF



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இவனும் ஒரு தமிழன்

சீனம் மழை பொழியுதென்றால்
குடையைத் தானும் பிடித்திடுவேன்
கண்ட கண்ட இடம் எல்லாம்
கையும் காலும் தானே என்றால்?
தலைவர் போல ஒருவனே
காட்டிடுவேன் தொண்டுமே
ஊர்வலங்கள் கண்டனங்கள்
உண்மையிலே மறந்து விட்டேன்
ஊர் நினைவு இல்லாமல்
உல்லாசக் கூடலில் ஆடினேன்
யார் பிள்ளைகள் ஆனால் என்ன?
என் குடும்பம் இன்பபட்டுமே!!
யானை ஒன்று வருகிறதாம்
பொசுக்கவே தெருவினிலே
வேலை வெட்டி மறந்தவனாய்
வெருத்து வாயைப் பிளந்துவிட்டேன்
திரும்பி அதைப் படம் செய்தியால்
திரும்பி வரும் ஊர்வலங்கள்.
விரும்பிடாத செய்தியால்
விரைந்து பாயும் கண்டனங்கள்.
இப்ப என்னைத் தெரியுமா?
இவனும் ஒரு தமிழன் தான்.

— M. மதிவாணன் —

5/100 AACHAN

"பணம் அடித்தளம் தெரியாத ஒரு கடல்
அதில் கௌரவம், மனச்சாட்சி,
உண்மை ஆகியவையெல்லாம் மூழ்கிவிடும்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடு

என் அப்பாவின் செய்கைகளை நினைத்துப் பார்க்கும் போது எனக்கு ஆத்திரம், ஆத்திரமாக வருகிறது. என் சுதந்திரத்தை அடியோடு பறித்து விட்டாரே... எங்கோ அறுத்துக்கிடந்த மாட்டை வீட்டுக்கு இழுத்து வந்தாலும் வந்தார். ஒரு வேலையா, இரண்டு வேலையா? காலையில் நேரத்தோடு வயலுக்கு மேய்ச்சலுக்கு கொண்டு செல்ல வேண்டும். ஓடக் கூடிய திராணி இல்லாத அந்தச் சனியனை இழுக்காத குறையாக கொண்டு செல்வதும் ஒரு பெரிய வேலைதான். மதியம் உச்சி வெயில், குளிரும், பின்னேரமும் தொடர்ந்து வயலில் அமர்ந்து கொண்டு செல்ல வேண்டும். மாலையில் மீண்டும் வீட்டுக்கு இழுத்து வர வேண்டும். இதெல்லாம் பெரிய வேலையா தம்பி என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கிறது. நான் உங்களுடைய இடத்தில் இருந்து கொண்டு இந்தக் கதையை நீங்களும் படிக்கும் போது என் நிலையில் எப்படி என்பது உங்களுக்குத் தெரியாமல் விடும்.

.... காலை எழுமணியாகி விட்டது. அவசர அவசரமாக கிணற்றுத் தண்ணீரை எடுத்து பல் தீட்டி முகம் கழுவி, உடுப்பை மாற்றிக் கொண்டு தொழுவத்திலிருந்து மாட்டை அவிழ்த்து வயலை நோக்கி நடக்கலானேன். எனது மனம் சபித்துக் கொண்டு இருந்த, எதுவும் பிடிப்பே இல்லாத அந்த மாட்டைப் பார்க்க அதைக் கொல்ல வேண்டும் போன்ற ஆத்திரம் மனதை நிறைத்தது. இந்தச் சனியனை விலைக்கு வாங்க அப்பாவுக்கு என்ன பைத்தியமா பிடித்து விட்டது?.....

எங்கள் ஊரில் கோடைகாலம் வந்து விட்டால் தண்ணீர் பஞ்சம், குடிப்பதற்கு நல்ல தண்ணீர்க் கிணறுகளுக்கும் போய் தண்ணீர் எடுத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரவேண்டும். தீர்மானிக்காத நல்லதம்பி என்று நோய்க்கு அழுதுக்கு நல்லதம்பிக்கு சொந்தமான ஒரு இளம் மாடு ஒன்றுபடி இருக்கிறது. வண்டியின் பிறப்புத்தியில் ஒரு பெரிய 'பராய்' போ நீந்தப் பட்டிருக்கும். நீலமம் நல்ல தண்ணீர் கிணறுகளுக்குப் போய். இருவாரியால் தண்ணீர் இறைத்து, பீப்பானை நிரப்பி கடைகளுக்கும் (போசனசாலைகள்) வீடுகளுக்கும் தண்ணீர் விநியோகம் செய்வது அவர் தொழில். இவருக்கு வெகுவாக இரு நல்ல இணைமாடு கிடைத்திருக்கிறது. அதுவும் இறைச்சிக்கு ஆயத்தப்பட இருந்த மாட்டை நல்லதம்பி கண்டு, குறைந்த விலையில் வீட்டுக்கு கொண்டுவந்து விட்டார். ஆனால் வீட்டு மால் வைத்து நல்ல சாப்பாடு போட்டு போக்க அவனிடம் வசதியில்லை. [illegible]காலம் அப்பாவின் கண்ணில் பட்டு விட்டது. அந்தமாடு.... ஒரு தொகையை கொடுத்து அந்தமாட்டை வாங்கி வீட்டுக்கு கொண்டுவந்து விட்டார் அப்பா... அங்கு வரும் போது நடக்கவே முடியாத அந்தமாடு... என் மீது அன்றிலிருந்து பிரியமாக இருந்தது. பள்ளிக்கூடம் போய்வந்து என் கைப்பட விளையாட்டுப் பொருளும் கூடிய இல்லை. இருக்கும் கொஞ்சம் பராமரிக்கும் வேலையை என்னிடம் போட்டு விட்டார் அப்பா.....

மாதங்கள் ஓடியபடி நடந்தது.

எனக்கு வயதும், நெஞ்சும் ஆத்திரத்தை ஊட்டியது. வீட்டுக்கு வந்து இரண்டு வாரங்களாகிவிட்டன. இருக்கும் ஒன்று நேரம் வயிறு நிறையப் பின்னாக்கு, தவிடு கிடைக்கிறது. பச்சைப்புல்லும் [illegible]. இலைகுழைகளும் கொடுக்கப் படுகிறது. [illegible] அந்த [illegible] தான் அப்பாவுக்கு [illegible] மாட்டு வைத்தியம் தான். இதை உடுப்பாக [illegible] என்னும் [illegible] போய் [illegible] செய்திருக்கிறார்.

அப்பாவின் கருத்த ஆத்திரம் மாட்டுப் பின்பக்கம் திரும்பியது. மாட்டைக்கட்டி வைத்திருந்த கயிற்றால் வேகமாக கயிற்றால் அடித்தேன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேதனை தாளாமல் மாடு பதைத்துக் கொண்டது
அந்நேரம் கண்ணை மறைத்தது. அக்கோரத்
தைநாடு பெருகும், பேயும் அழுக்க மாடு மேய்க்கி
விடுத்தது. திகைப்பை எடுத்து வேகமாக இழுத்தது.

சிம்பொழுது எங்கே உனக்கு
சிந்தப்பலம் வந்தது. பதற்றமாக கழுத்து கயிறு விட
பக்காவது மாட்டுடன் வயலுக்குச் செல்ல எடுக்கும்
கன்று காலைப்போது கொஞ்சம் வரம்புகளில் வயலுக்கு
வந்தாயிற்று.... மாடு இந்நேரம் திகாணையின்றித்
தாண்டுவது.... கயிற்றால் அடித்ததால் அதன்
முதுகில் பல கோடுகளில் பருக்கள்... இரத்தமும்
பல கோடுகளில் கசிவது தெரிந்தது... அந்நேரத்தில்
அழுதுவிட்டேன். அப்பா கண்டால் கொலை
தான் விழும் என்றபயம் மனதில் எழுந்தது
இன்னொன்ன செய்வது? அழுதது அழுதா
யிற்று. கொண்டு கண்ட கயிற்றை நாட்-
-டில் கட்டியிருந்த கயிற்றுடன் சேர்த்து
நிலத்தில் இறுக்கியிருந்த ஒரு இரும்புத்துண்டில்
கயிற்றை மடித்து விட்டு விடுதலைக் கட்டவிழ்ந்த
ஆத்திரத்தில் இவைகளைக் கொலை செய்துவிட்டு
பிரேதத்தை விட்டு விட்டு ஆத்திரம் அடங்கிய
நிலையில் என்ன செய்வதென்று பதறுவதைப்
போல மனம் கொந்தளிக்க வீட்டை நோக்கி
நடந்தேன்....

...சனிக்கிழமை என்பதால்
பள்ளிக் கூடம் இல்லை. வெளியே போய்விட்டு
சாப்பாட்டு நேரத்திற்கு தயாராக வீட்டுக்குள்
நுழைந்தேன். சாப்பிடுவதற்கு முதல் வயலுக்கு
பின்னாலுக்கு அப்பாவுடன் போய் வரவேண்டும்
நேரத்தைப் பார்த்தேன். மணி பதினொன்றாகி
விட்டது. அப்பா வரும் நேரம்.... அவசரம்..
அவசரமாக அரிசியுடன் கொல்லைக்குள் நுழை-
-ந்தேன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவிடு பிண்ணாக்கு தண்ணீர் விட்டுக் கலக்கிக் கொண்டு வாளியுடன் வந்த போது அப்பா எதிரே வருவது தெரிந்தது. சற்றும் எதிர்பாராத வேகத்தில் அவர் கையிலிருந்த தடியால் வேகமாக ஓங்கி அடிவிழுந்தது. ஐயோ!.. என்று அலறியபடி வேதனையில் கையிலிருந்த வாளி கீழே விழ தவிடும் பிண்ணாக்கும் சிதறிக் கொட்டுப்பட்டன. தொடர்ந்து அடி விழவே தொடங்கினான்... இடையில் வந்து புகுந்து என்னை கட்டிப் பிடித்தார் அம்மா.... அம்மா தான் அடியை வாங்கியிருக்க வேண்டும். அப்பா தடியை எறிந்து விட்டு ஆத்திரத்தோடு கத்தியது காதில் விழுந்தது.

சனியன் மனுசத் தன்மையே இல்லாத ஜென்மம்... மாட்டை இப்படியாரும் அடிப்பாரா? அவன் செத்த வழியில் கொண்டு என்னிடம் வந்து மாட்டைக் கொன்றிடுவான் உன் மகன் ஏன் நான் கடையில் இருந்த யானை விட்டு விட்டு நேராக வயலுக்குப் போனேன். பாவம் அத்தனை வடுக்கள். இரத்தம் கசிந்தபடி அந்த வாயில்லா ஜீவன் கிடக்கின்றது... இரண்டு கால் பிடிக்க....

அப்பா வாய்க்கு வந்தபடி திட்டி விட்டுப் போய் விட்டார் அம்மா என்னை மடியில் வைத்து ஆதரவோடு பார்த்தார் என்னைச் சுற்றி என்று பல கேள்விகளில் பெரிய வடு. இரத்தம் கசிய ஆரம்பித்திருந்தது. இன்றும் எத்தெத்த இடத்தில் எத்தனை வடுக்களோ? உடம்பு வேதனையில் வலிக்க அழ ஆரம்பித்தேன். காலையில் அந்த வாயில்லா ஜீவனுக்கு அடிமேல் அடி அடித்து எத்தனை வடுக்களை உண்டாக்கினேன்? இப்போது இந்த வாயுள்ள ஜீவனுக்கு எத்தனை வடுக்கள்? ஆனால் ஒரு வித்தியாசம் இந்த வாயுள்ள ஜீவனால் அழ முடியுமா? ......, விக்கி, விக்கி, அழுகின்றேனே.....

A.J. ஞானேந்திரன்.

4100 DUISBURG

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெரிந்து கொள்ளுங்கள் !

* குறிஞ்சி மலரைப் போல் பிலிப்பைன்சில் பதினைந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது சிம்பா என்னும் ஊதா நிற முடைய மலராகும்.
* சீனா நாடுதான் முதன் முதலாக தேநீர் பருகுவதை அறிமுகப்படுத்தியது.
* உலகில் 26 நாடுகளுக்கு கடற்கரையே கிடையாது.
* ஆங்கில மொழியில் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட வார்த்தைகள் உள்ளன. ஆனால் இரண்டாயிரம் தான் பயன்படுத்தப் படுகின்றன.
* உலகிலே மிக உயரமான இடத்தில் அமைந்த விமான நிலையம் இந்தியாவி- -லுள்ள லடாக்கு தானாகும்.
* பூக்களிலேயே விலை உயர்ந்த பூ கெமெ- -மப்பூதான்
* நாம் தும்மும் போது தும்மலின் வேகம் மணிக்கு 160 கிலோமீற்றர்.
* சிசிலி என்ற நாட்டில் ஸ்ட்ராம்போலி எரிமலை எப்பொழுதும் நெருப்பை கக்கிக் கொண்டிருக்கும்.
* போர்த்துக்கலில் சிகரெட் லைட்டர் வைத்திருப்பதற்கும் அனுமதிப் பத்திரம் பெற வேண்டும்.

— நிஷாலி - ஜெனி - லோகினி

5202, HENNEF / ROTT

www.tamilarangam.net

# செய்தித் துளிகள்

20.5.91 * திருமலை மாவட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்துமாறு EPRLF, புளொட், கூட்டணி கட்சிகள் கண்டனம் தெரிவித்து அரசுக்கு அறிக்கை விட்டுள்ளன.

31.5.91 * கடந்த மாதம் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விவகாரங்களில் ஈடுபட்ட இங்கிலாந்து நாட்டு பிரிட்டிஷ் தூதுவர் விரும்பத்தகாதவர் என பிரகடனப் படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

1 * பதவியாவில் இடம் பெற்ற நிலக்கண்ணி வெடியில் 8 இராணுவத்தினர் பலியானதுடன் ஜீப் வண்டியும் சேதமடைந்தது.

3.6.91 * கம்பஹா, காலி, மாத்தறை பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 50 மேற்பட்டோர் இறந்ததுடன் 15 ஆயிரம் பேர் மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

8.6.91 * ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இந்திய புலனாய்வு விசாரணைக்கு உதவ விடுதலைப் புலிகள் உதவத் தயார் என லண்டனிலிருந்து கிட்டு தெரிவித்துள்ளார்.

* முன்னாள் யாழ் M.P. மார்ட்டின் கொழும்பில் காலமானார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

10.6.91* வடகிழக்கு இணைப்பை வலியுறுத்தும் தீர்வே வேண்டும் என தமிழ்க்கட்சிகள் கூட்டு முன் வைத்துள்ளன.

11.6.91* திருமலை தில்லைநகரில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 6 இராணுவத்தினர் பலியாகியுள்ளனர்.

14.6.91* மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை புலிகளின் கண்ணி வெடியில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டதையடுத்து 100 பேர் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டதுடன் 450 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டும், பல பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டும் உள்ளனர்.

19.6.91* மறைந்த EPRLF தலைவர் பத்மநாபாவின் ஓராண்டு நினைவு கடைப்பிடிக்கப்பட்டது.

20.6.91* வவுனியாவில் நடைபெற்ற மோதல்களில் 25 படையினரும், 120 புலிகளும் பலியானதாக அரசு செய்தி கூறுகின்றது.

22.6.91* வெலிஓயாவில் புலிகளின் தாக்குதலில் 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* கொக்கட்டிச்சோலை படுகொலை சம்பவம் விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்துக்கும் பொறுப்பாக இல்லை என பாராளுமன்றத்தில் ஜோசப் M.P. கேள்வி எழுப்பினார்.

* சிலவத்தை கூட்டுப்படைத் தலைமையகத்தில் ஏற்பட்ட கார் குண்டு வெடிப்பில் 37 இராணுவத்தினர், 13 பொதுமக்கள் பலியானதுடன் கட்டடங்களும் பலத்த சேதமடைந்தன.

23.5.91* ராஜீவ் காந்தியின் மறைவுக்கு அமெரிக்கா, ரஷ்யா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா, சீனா, ஜப்பான், பாகிஸ்தான் தலைவர்கள் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

25.5.91 * சீனத் தலைவர் சோவியத்துக்கு விஜயம் செய்திருந்ததால் கிரெம்ளின் உறவில் அபிவிருத்தி தோன்றியுள்ளது.

29.5.91 * 30 ஆண்டு யுத்தத்தின் பின் எத்தியோப்பிய தலைநகரை கிளர்ச்சிப்படையினர் பிடித்துள்ளனர்.

* பாங்கொக்கிலிருந்து வியன்னா (ஒஸ்திரியா) சென்ற லௌடா-ஏர் விமானம் விபத்தில் 223 பேர் பலியாகியுள்ளனர்.

* நேபாளத்தின் புதிய பிரதமராக கிரிஜா-பிரசாத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1.6.91 * பிலிப்பைன்ஸில் அரசபடைகளுக்கும் பொதுமக்களுக்குமிடையே நடைபெற்ற மோதலில் 50 பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

8.6.91 * 6 வார ஈராக் - குவைத் யுத்தத்தில் 1 லட்சம் ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாக அமெரிக்க அறிக்கை கூறியுள்ளது.

10.6.91 * பாகிஸ்தான் ரயில் விபத்தில் 55 பேர் பலியானதுடன் 150 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

11.6.91 * பிலிப்பைன்ஸில் எரிமலை வெடித்ததால் 15 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

12.6.91 * பாகிஸ்தானில் வீசிய அனல் காற்றுக்கு 418 பேர் பலியாகியுள்ளனர்.

13.6.91 * முன்னாள் பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத்துக்கு 10 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

20.6.91 * ஒன்றிணைந்த ஜேர்மனியின் புதிய தலைநகராக பேர்லின் மாற்றம் பெற்றுள்ளது.

* இந்தியாவின் புதிய பிரதமராக காங்கிரஸ் கட்சியின் தலைவர் நரசிம்மராவ் தெரிவாகியுள்ளார். தமிழ் நாட்டின் முதலமைச்சராக செல்வி ஜெயலலிதா தெரிவாகியுள்ளார்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அர்த்தமுள்ள வெளிநாடு

## பகுதி - 4 வேசம்

உலகமெனும் நாடக மேடையில் எத்தனை ஆயிரம் வேசதாரிகள், அவர்களில் எத்தனை மனிதர்களின் வேசங்கள் கலைக்கப்பட்டன போன்ற செய்திகள் பத்திரிகைகளால் வாரி-யிறைக்கப்பட்டாலும் வெளியுலகுக்கு திரைமறைவாக நமக்குள்ளேயே, எம்மை தினமும் ஏமாற்றும் வேசதாரிகள் எத்தனை பேர் என்பதை கண்டுபிடிப்பதற்குரிய திறமை எல்லோருக்கும் இருந்தாக வேண்டும்.

வேசதாரிகளை முளையிலேயே அடையாளம் கண்டு கிள்ளி எறிவதுதான், ஒருவனது முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும். வேசதாரிகளால் வாழ்வில் ஏமாற்றங்கள், ஏமாற்றங்களால் மனமுடைவு. அரசியல் அரங்கில் கட்சிகள் இயக்கங்கள் என்று வேசம் போட்ட மனிதர்களால் ஒடுக்கப்பட்டோரின் நிலை மிகவும் சின்னா பின்னமாகியது. போதாதென்று சில காலமாக பாதுகாப்பை முன்னிட்டு வெளிநாட்டுக்கு வருவதற்காக சொத்துக்களை விற்று "ஏஜென்சி" என்ற வேச-மனிதர்களின் பயங்கரத்தை உணராமல் ஆசைவார்த்தைகளில் மயங்கி, கையில் உள்ளவற்றை எல்லாம் தாரை வார்த்துவிட்டு கொழும்பிலும், இந்தியா, தாய்லாந்து, சிங்கப்பூர், யுகோஸ்லாவியா



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன்ற முன் பின் அறியாத அந்நிய தேசங்களிலும் இருக்குமவர்களாக தவிக்கும் எம்மவர்கள் தான் எத்தனை ஆயிரம்? இப்படி இந்தியாவில் நிர்க்கதியான பலர் இவ் வியாபார முதலைகளின் பிடியில் சிக்கி போதைப் பொருட்களை கடத்துவதிலும் ஈடுபட்டு சிறைக்குள் தவி-க்கிறார் ஆயுளை அடைக்கலமாக்கிய நாட்டு காரணமான "ஏஜென்சிமார்" வேசமிட்ட வர்களை என்ன செய்வது?

மகன் வெளிநாட்டில் நன்றாக உள்ளான் என்று தினை, தினையாக சீதனம் வாங்கி பெண்ணை ஏற்றுமதி செய்யும் பெற்றோர்கள், தெரிந்திருந்தும் "கூலியாய் வேலை செய்கிறான்" என்று உண்மை கூறும் நண்பர்கள். பெண்ணுரிமை பற்றி மேடையில் முழங்கிவிட்டு, வீட்டில் மனைவியை சித்திரவதை செய்யும் கணவன். காதலியை தாயகத்தில் காத்திருக்கும்படி சொல்லிவிட்டு வெள்ளைத்-தோல்களுடன் கூத்தாடும் காதலன். இப்படி எத்தனை வகையான வேசதாரிகள் இந்த வெளிநாட்டில்?

ஜேர்மனியைப் பொறுத்தவரையில் காலநிலை எப்போது மாறும் என்று கூறுவது கடினம் போலவே வேசதாரி-கள் எந்த வடிவில் வந்து ஏமாற்றுபவர்கள் என்று கூறுவதும் கடினம். இவர்களில் ஒருவன் பல படிகளுக்கு மேல் இருப்பவர். ஜேர்மன் மொழியில் பாண்டித்தியம் பெற்றவர். பிறப்பில் இந்தியரான அவர் கிறிஸ்தவ சபை ஒன்றின் முக்கிய உறுப்பினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வேலைவாய்ப்பு போன்ற, சிறு, சிறு சலுகைகளை எதிர்பார்த்து கிறிஸ்துவை அறிய இயல் என நடிப்பவர்களையும், உண்மையிலேயே விசுவாசிக்க ஆவலுற்றவர்களையும் தவறாமல் காலில் அழுத்தச் செல்வார். மற்றும் பல அரிய உதவிகளையும் பின் நிற்காமல் செய்வார். அதனால் எல்லோருக்கும் உதவும் நல்லவர் என்று பெயர் பெற்றார். இப்படித்தான் பிரெஞ்சு தேசியன் மொழி பெயர்ப்புச் சம்பந்தமாக, சித்தனின் உதவியை நாடிய போது உதவி செய்ய மறுத்துவிட்டார். காரணம் தேசியன் பிரெஞ்சு கூட சித்தனின் அழைப்பை ஏற்று கிறிஸ்தவ சபைக் கூட்டத்திற்கு சென்றதில்லை எனவே சித்தனின் பிறதவனைய கிறிஸ்தவ சபைக்கு ஆட்களை அழைக்கும் வேசம் என்று கூறாமல் என்னவென்பது?

கிருஷ்ணனுக்கு இராவுதான் ஜேர்மன் மொழி தெரியும். ஒரு தொழிற்சாலையில் வேலை உண்டாக அறிந்து சித்தனின் உதவியை நாடினான். தான் விசாரித்து உதவுவதாக கூறிய சித்தன் அன்று ஜேர்மன் மொழியறிவு உள்ளவர்தான் தேவையாம் என்று கூறி, அந்த வேலை கிருஷ்ணனுக்கு கிடையாது என்றும் கூறினான். ஆனால் இப்போது சித்தனுடன் கூட்டத்திற்கு செல்லும் ஜேர்மன் மொழியறிவு அற்ற மக்கள் வாலிபர் ஒருவர் அந்த தொழிற்சாலையில் வேலை செய்கிறார். பாவம் கிருஷ்ணன் "எனக்காக தொழிற்சாலைக்குச் சென்று கதைத்த சித்தனின் உதவியை மறக்க முடியாது" என்று கூறிக்கொண்டிருக்கிறான்.

www.tamilarangam.net

இவர் வலிய வந்து உதவி செய்வேன் என்று கூறினால் அதற்கான காரணம் ஏதுவாக இருக்கும் என ஆராய்வது சிறந்தது. சிந்தித்து செயலாற்றுவதன் மூலமே வேசதாரிகளின் வலையிலிருந்து தப்ப முடியும்.

வேந்தனை ஒரு ஜேர்மன் வயோதிபத் தம்பதி-யினர் தத்தெடுத்து வளர்த்து வருகின்றனர். இதை அறிந்த வேந்-தனின் நெருங்கிய உறவினர்களிலர், அந்த ஜேர்மன் தம்பதியினரைத் தொடர்பு கொண்டு 'வேந்தனை திருப்பக் கேட்பான்.... தரவேண்டாம்....' எனக் கூறினார். இந்த உறவினர் வலிய வந்து கூறியதில் ஏதோ விசயம் உள்ளது என்பதை உணர்ந்து கொண்ட அந்தத் தம்பதியினர் வேந்தனையே தத்தெடுத்து வைத்திருக்கிறார்கள்.

அரசியல் தலைவர்கள் தொடக்கம் அடிமட்ட மனிதர்கள் வரை வேசதாரிகள் இருக்கிறார்கள். நாங்களே எங்களை அறியாமல் சிலசந்தர்ப்பங்களில் வேசம் போடுகிறோம்.

இந்த வெளிநாட்டு வாழ்க்கை தினம், தினம் பல வேசதாரிகளை அம்பலப்படுத்தினாலும் வேசதாரிகள் வளர்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

(5,வது பகுதி அடுத்த இதழில்)

ராஜன் - முருகவேல்
4018, LANKENFELD



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிலை

*

மலையிலிருந்து கற்கள் பிளக்-கப்படுகின்றது. பிளக்கப்பட்ட கற்களில் ஒருகல் ஆண்டவன் சிலையாக அமைகிறது. மற்றக்கல் அதைத் தாங்கி நிற்கின்ற இட-மாக அமைகின்றது. அடுத்த கல் பக்தர்கள் நடந்து செல்கின்ற படிக்கல்லாக அமைகின்றது. ஆண்டவன் சிலையாக அமைந்துவிட்ட கல், மறந்து விடக்கூடாது படியில் கிடக்கும் கல்லும் என்னைப் போல மலையிலிருந்து வந்தது தான் என்பதை. எனவே எம்மிடம் எந்த நிலை வந்தாலும் இந்த நிலையை மறக்காமல் வாழ்தலே நன்றாகும்.

---

*

மீனைப்பிடித்து விட்டு அதைப் பார்த்து கேட்டானாம் உன்னைப் பொரி-த்து சாப்பிட்டால் நல்லாயிருக்குமோ? குழம்பு வைத்து சாப்பிட்டால் நல்லா-யிருக்குமோ என்று கேட்ட பொழுது மீன் கூறியது.... எப்படிச் சாப்பிட்டா-லும் எனக்கு உயிர் போகும் வேதனை தானே என்றதாம்.

க. கஜேந்திரன்
4100 DUISBURG



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவு.17

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | ரு | க் | கு | ண் | X | ரு |
| ர் | வி | ஞ் | ஞா | ண | ம் | ள |
| ண | ந | ஆ | கோ | வ | ல | ண் |
| ண் | ஆ | மி | ழ் | ஷ | ழ | ம் |
| உ | பி | X | கி | ட் | ல | ர் |
| யி | ழ | கா | வ | அ | X | மொ |
| ல் | ண் | கி | லி | ஞா | ண | ம் |

சரியாக விடை எழுதியவர்கள்:-

1- செல்வி - ஸ்ரீ கௌரி - கிருஷ்ணபிள்ளை - SARSTEDT
2 - " - தர்மிளா - கலாநிதி - HENNEF
3 - " - லாவண்யா - கருணாநிதி - DUISBURG
4 - " - சர்மிளா - உருத்ராசா - DUISBURG
5 - " - ராகினி - ரட்ணகோபால் - DUISBURG
6 - " - மைதிலி - மகாலிங்கம் - HÜCKELHOVEN
7 - " - கௌரி - ஜீவேந்திரன் - GOCH
8 - " - சுபாதா - நடராசா - WÜPPETRAL



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

9- திருமதி - தமிழ்ஜோதி - சந்திரகுமாரியர் — ESSEN
10. " — தீனா - விக்னேஸ்வரன் — "
11. " — ஜோதி — கலாநிதி — HENNEF
12. திரு — வை — ஜெயவேந்திரம் — SOLINGEN
13. " — R - ரகுநாதன் — HÜCKELHOVEN
14. " — K - ரவீந்திரன் — WALKIRICH
15 " — ரஜந்தன் - சத்தியமூர்த்தி — DUISBURG

இவர்களுக்கு எங்கள் பாராட்டுக்கள். இவர்களில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டு 10, DM பரிசாக பெறுபவர்:-

செல்வி - கௌரி - நவேந்திரன்
MELATEN - STR - 14
4180, GOCH - 1

<u>குறிப்பு</u>:-

* நிதிப் பற்றாக்குறை காரணமாக இதழ் - கேள்விப் போட்டிக்கு வழங்கி வந்த 20, DM 10, DM ஆக குறைக்கப்பட்டுள்ளது என்பதை வாசகர்கட்கு அறியத் தருகின்றோம்.
* இதழ் 18, (யூலை 91) தொடக்கம் இதழ் - கேள்விப் போட்டிக்கு 10, DM அன்பளிப்பு வழங்குபவர். செல்வன். S. மகேந்திரம்.
DUISBURG 1
இவருக்கும் எங்கள் பாராட்டுக்கள்....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# குறுக்கெழுத்துப் போட்டி 18

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ✗ | 2 ✗ | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 ✗ | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 ✗ | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இடமிருந்து வலம்:-

3-5 - யாழ் கோட்டையின் இராணுவ முகாம் அமைந்துள்ள இடம் இன்று.

5-6 - பசித்தாலும் புல்லைத் தின்னாத மிருகம் (பு - கி)

6-7 - கிளை ஆடுகின்ற வெளி) எத்தனையோ பேரை பலியெடுக்கிறது.

8-9 - கிளைமறந்து வாழ்பவர்களைக் குறிக்கும் பெயர்.

10-12 - கண்ணனின் வஞ்சனையினால்தான் பாரதப் போர் நடந்தது.

16-19 - பாம்பிற்கு தலையையும் மீனிற்கு வாலையும் காட்டி வாழும் இதைப் போல மனிதரும் இருக்கிறார்கள்.

23-24 - விமானத்துக்குக் கிட்ட கூட தெரியாமல் போவது (கு).

www.tamilarangam.net

26-28 - இயற்கையாக எல்லோரும் பெறும் இடம்.
30-33 - இது இல்லாவிட்டால் அறிவிருந்தும் பிரயோசனமில்லை.
34-35 - இது பெண்ணிற்கு வேலி என்பார்கள்.
32-33 - பணம் கூடினால் சிலரிடம் இது இருக்காது.
36-39 - வெளிநாடுகளிலிருந்தா எம்மவரிடம் இதற்கு பஞ்சம் இல்லை.
44-48 - இதனைக் கூட யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லக் கூடாதாம்.

மேலிருந்து கீழ்:-
8-22 - வன்னிப் பகுதியில் இந்த மிருகம் அதிகம்.
11-39 - நெற்றித்திலகம்.
16-23 - நடப்பதுயாவும் இப்படியானால் வேதனை தரப்படுத்திடும்.

29-43 - நோய்களில் ஒன்று.
33-40 - வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினையே அறுப்பான்.
34-48 - தாய்க்குப் பின் இவர் என்பார்கள்.
42-49 - இது உதவுவது போல் அண்ணன், தம்பி உதவமாட்டான் என்பார்கள்.
7-35 - [illegible] இது இடைக்கோமான்றை [illegible] போடு நான் வாழ்கிறோம்.

(4) பதி அ திகதி - 20-7-1991



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாம் அழுதும் என்ன பயன்

நாம் அழுதும் என்ன பயன் - நம்
நாடும் எம் வேதனையில்
நீரில்லா நிலமெல்லாம்
பாலைவனம் ஆனது போல்
சோலைவனத் தீவு போல்
சொர்ப்பனத்தில் நாம் இருக்க
உறவைக் குயில் ஒன்று
உள்ளூறப் பாடியதேன் ......

கீற்றுயும் பூவில்
கருத்தூறும் பூவண்டே
நம் மண்ணை ஆளும் காளை
மனமொத்துப் பாடாதோ
ஜன்னலிடும் கிளை
எம் தேசக் காற்று
உள் சீற உருக்கி
மனக் கண்ணீராய் வடித்தோமே......

பன்னீரும் வேண்டாம்
மா சென்னீரும் வேண்டாம்
புண்ணினில் இருக்கும்
புழுக்களைக் கொல்ல வொரு
மருந்து தேடி மகிழ்ந்திட வேண்டும்
மனம் தெளிந்திடல் வேண்டும் .......
நாம் அழுதும் என்ன பயன்
நம் நாடும் எம் வேதனையில் ........

சுவையூர் - விஜயன்
4100 DUISBURG



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரே பார்வையில் இந்திய தேர்தல் முடிவுகள்

| | | |
|---|---|---|
| மொத்த லோகசபை தொகுதிகள் | — | 545 |
| தேர்தல் நடைபெற்றவை | — | 511 |
| அறிவிக்கப்பட்ட முடிவுகள் | — | 474 |
| இந்திரா காங்கிரஸ் | — | 217 |
| பாரதிய ஜனதாகட்சி | — | 110 |
| ஜனதாதளம் | — | 47 |
| அ. தி. மு. க. | — | 11 |
| தெலுங்கு தேசம் | — | 12 |
| மாக்ஸிஸ்ட் கம்யூ. கட்சி | — | 34 |
| இந்திய கம்யூ. கட்சி | — | 5 |
| சமாஜவாதி ஜனதாதளம் | — | 2 |
| சிவசேனை | — | 4 |
| இ. யூ. முஸ்லிம் லீக் | — | 2 |
| ஆர். எஸ். பி. | — | 4 |
| ஜே. எம். எம். | — | 6 |
| ஏனையவை | — | 20 |

# தமிழ்நாடு சட்டசபை முடிவுகள்

| | | |
|---|---|---|
| தொகுதிகளின் மொத்தஎண்ணிக்கை | — | 234 |
| தேர்தல் நடந்த இடங்கள் | — | 232 |
| முடிவு அறிவிக்கப்பட்டவை | — | 232 |
| அ. தி. மு. க. | — | 163 |
| காங்கிரஸ் | — | 61 |
| தி. மு. க. | — | 1 |
| பாட்டாளி மக்கள் கட்சி | — | 1 |
| மாக்சிஸ்ட் கம்யூ. கட்சி | — | 1 |
| இ. கம்யூ. கட்சி | — | 1 |
| அண்ணாபுரட்சி தலைவர் முன்னணி | — | 2 |
| சுயேச்சை | — | 1 |

வீரகேசரி - 20.6.91



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆசிரியருக்கு,

'மாஜி இந்திய பிரதமர், எதிர்கட்சி தலைவராக இருந்து உடல் சின்னா பின்னமாகி, தலையே இல்லாமல் மடிந்து விட்ட ராஜீவ் காந்தி இறந்ததை நீங்கள் (இதழ் 17) எங்கள் இதழில் கண்டித்து எழுதியதை எங்களால் ஜீரணிக்க முடியவில்லை. தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு இடங்கொடுக்காமல், தனது நாட்டைக் காப்பதாக ஒப்பந்தம் என்ற பெயரில் இலங்கையில் புகுந்து 6000 அப்பாவி மக்களை அழித்து ஆயிரமாயிரம் தமிழ்ப்பெண்களின் கற்பை சூறையாட உறுதுணையாக இருந்த இந்த அயோக்கிய ராஜீவுக்காக நீங்கள் வேதனைப்படுவது நீங்களும் தமிழனை அழிக்கும் ஆரியர்களுக்கு உடந்தை போவதை உணர்த்துகின்றது. தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதாக சொல்லிக் கொண்டு மக்களின் குரல் வளையை நெரிக்கிறீர்கள். இவ்வாறு செய்பவன் தண்டிக்கப்பட வேண்டும் என்பது பகவத் கீதையிலிருந்து தமிழன் கற்றுக் கொண்ட விடயம். நீங்கள் இதனைக் கண்டிப்பது காக்காய் பிடிப்பது போன்ற செயலான விடயம்.

இ. சிறிஸ்கந்தராசா
சி. ரஞ்சன்
ம. மாணிக்கவாசகர்
E. ஜெயராசா
N. தெய்வேந்திரராசா

— DUISBURG



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாணவர்கள் மேதையாக அனைவரும் ஆனவ இருப்பாரும் நீராக மாட்டார். இவனுடைய மாணவத் தினம் மகிழ்ந்து கொண்டாட வேண்டுமென்பது மாணவரின் கருத்தாக இருக்க வேண்டியது. இவனின் திறமையின் பெயரால் அவனது கனி வினையை தெரிந்தாக எதுவாகும் விளையாட்டாக கொண்டு செய்யவில்லை. மனித நேயத்துடன் அவனின் திறந்த கட்டுத்தில் கலந்து கொள்வார்கள். இவ்வகையில் மனிதனும் தனது அனுபவத்தை வெளிப்படுத்துவது வேறு எதுவும் இல்லை.

மனிதராய் பிறந்தோராம் யாவரும் ஒரே நிலையில் தோன்றியோர் உற்றவர்கள் என்பது உண்மை. இதில் நாம் இச் சமுதாயத்தில் சரியாக நடந்து கொள்கிறோமா? என எமது இதயங்களை தட்டிப் பார்ப்போம்.

நீங்கள் அறிவிட்டதுபோல் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டு மென்றால். இன்று உலகில் மனித நடமாட்டமே இருக்க முடியாது என்பது எனது கருத்தாகும்.

இக் கொள்கையின் பின் வினாவுக்கு வருகின்றேன். யார் செய் திருந்தாலும். பழி தமிழ் போராளிகள் மீதே விழுந்து இருக்கின்றது. இதனால் தமிழ்நாட்டில் உற்ற கொள்கை அதிகாரங்கள் பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தி கொடு க்கின்றது. தமிழ் போராளிகளுக்கு

www.tamilarangam.net

எதிர்காலத்தில் தமிழ் நாடடைதல் தாயகம்
இல்லாமல் போயிருக்கிறது. தமிழர்களுக்கு
இனி எதிர்த்து வந்த தலைவர்கள் கூட
உயிர்வாசம் தெரியாமல் போயிருக்கிறார்.
நிலவரத்தையும் விட இந்தியாவின்
இராணுவ ஆதரவையும், இதர ஆதரவை-
யும் நாம் இழந்து விட்டோம். இன்று
இலங்கை தமிழர்கள் யாவரும் கொலை-
யாளிகள் என்ற கண்ணோட்டத்தில்
உலகம் பார்க்கின்றது. இதுவே எனது
கருத்தாகும்.

---

ஆசிரியருக்கு;

கடமைநிறைந்த, காரம் பொருந்திய போல்
மன்றத்தின் அமைந்துள்ளது. தொடர்ந்து
பாராட்டுக்கள்.

திருமதி. தேவி - மனோ தேவன்
5630, REMSCHEID

---

மன்றத்துக்கு!

சிறுவர் விடயங்களைக் கொண்டு
வெளியான சிறார்களின் கல்வி வளர்ச்
சிக்கு பெரிதும் ஊக்கமளிப்பதாக அமையுமென
நம்புகின்றேன்.

செல்வன். சி. விஜிந்தன்
6000 FRANKFURT



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீட்போம் தமிழ் மண்ணை

கொஞ்சும் பிஞ்சு
மழலைகள் - எம்
சொந்த மண்ணில்
நசுங்கிக் கிடக்கிறதே
நெஞ்சம் இல்லா
அரக்கர் கூட்டத்தால்
எம் - சொந்த மண்ணும்
செம் மண்ணாய் மாறுதே
சுதந்திர தீயும்
ஓங்கி வளர்கிறதே
எரிப்போம்
அரக்கர் கூட்டத்தை
மீட்போம் தமிழ் அன்னையை
வங்கக் கடலும்
வாய்விட்டுக் கதறுதே
பருவம் அடைந்த எம்
பாவையரைப் பார்த்து
பொங்கும் அலையும்
கரை சேர மறுக்குதே - நம்
சொந்தத் தமிழர் உடலம் கண்டு
ஓடும் நீரும் ஒதுங்கி நிற்குதே
பாய்ந்தோடும் தமிழர்
செங்குருதி கண்டு - இங்கு
நடக்குதே கலிங்கத்துப் போர்
அழிப்போம் புல்லுருவிகளை
மீட்போம் தமிழ் மண்ணை....

செல்வியூர்.. பிரியா
5142, HUCKELHOVEN



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிறங்களும் ஒற்றுமையும்

1 - தகாதவார்த்தைகள் பேசினால் ! -
*பச்சையாகப் பேசுகிறார்.

2 - தகாதமுறையில் எழுதினால் ! -
* மஞ்சள் பத்திரிகை

3 - பதுக்கிய பணம் ! -
* கறுப்புப் பணம்.

4 - விபச்சார விடுதிக்கு ! -
* சிவப்பு விளக்கு.

5 - நிர்வாணப் படத்திற்கு : -
* நீலப் படம்.

லோகிதி
5202 HENNEF

# யாழ்குடாநாட்டில் இன்று !!

1போ. பெற்றோல். 1000 ரூபா - 1கிலோமல்லி . 50 ரூபா
1போ. என். ஓயில். 500 ரூபா - 1கிலோ சீனி . 35 ரூபா
1போ. ம. எண்ணெய். 100 ரூபா - 1கிலோவெங்காயம் 20 ரூபா
1 கிலோ. அரிசி . 35 ரூபா - 1கட்டு சவர்க்காரம் 25 ரூபா
1 கிலோ. புளி . 20 ரூபா - 1தேங்காய் 5 ரூபா
1 கிலோ. மா . 25 ரூபா - மரக்கறி வகை
1 கிலோ. செ. மி. 100 ரூபா - 10 ரூபா — 25 ரூபா

www.tamilarangam.net

# கிரிக்கெட் போட்டி

DUISBURG தமிழர் விளையாட்டுக் கழகத்தினருக்கும் NEUSS-KAARST BÜTTGEN தமிழர் விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே மிக விறுவிறுப்பாக நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் DUISBURG தமிழர் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றி பெற்றனர்.

KREFELD தமிழர் விளையாட்டுக் கழகத்தினருக்கும் DUISBURG தமிழர் விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற மற்றுமொரு கிரிக்கட் போட்டியில் KREFELD தமிழர் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றி பெற்றனர்.

தொடர்ந்து இக்கழகங்கள் பல போட்டிகளில் பங்கு கொள்ள இருப்பதுடன் கோடைகால விடுமுறையில் (AUGEST) ஜேர்மனியில் நடைபெறவிருக்கும் மாபெரும் போட்டிகளிலும் பங்கு கொள்ளவிருக்கின்றன.

— அமல் —
4100 DUISBURG



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூல் அறிமுகம்

① 

## பெண்கள் சந்திப்பு மலர்

ஆண்டுக்கு ஒன்று
விலை :- 5, DM
தபாற்செலவு :- 60 பெனிக்.
விபரங்களுக்கு :-
PENNGAL CHANTHIPPU
FRAUN TREFFEN
INFORMATION ZENTRUM DRITTE WELT
OVERWEG-STR-31
4690, HERNE-1
GERMANY



**1991**

வெளியீடு : 1

② 

## கடல்

அலை 03 JUNI 1991
சமுதாய சஞ்சிகை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆக்கங்களை
அனுப்புவதற்கும்
இவ்விதழ் சம்மந்தமான
தொடர்புகளுக்கும்
தொடர்பு கொள்ளவேண்டிய
முகவரி.

**V. Sivarajah**
Angartalar-Str. 98
4100 Duisburg - 28
West Germany
Tel. No. 0203-706480

ஆக்கங்களின் திருத்தம்,
நிராகரிப்பு எமக்குரியது


www.tamilarangam.net

# ERDE

Tamilisches Magazin für Kultur, Literatur und Soziales

## வருங்காலங்கள் வரையட்டும்

நிர்மலா - இராஜேஸ்வரன்
ELSDORF



இவ்விதழ் தொடர்ந்து வர மனமுவந்த டியக்கோனி, செஞ்சிலுவை அமைப்பினருக்கு நன்றிகள்

Für die Freundliche **Unterstützung** bei der Herstellung dieses heftes danken Wir dem Diakonischen Werk und Deutsche Rote Kreuz.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்